செ. கு. எண்: 158 நாள்: 05.09.2018

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 5.9.2018

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இனயம்புத்தன்துறை கிராமம் மற்றும் தேங்காப்பட்டணம் கிராமத்தைச் சேர்ந்த 9 நபர்கள், அகஸ்தீஸ்வரம் வட்டத்தைச் சார்ந்த 2 நபர்கள் உட்பட 14 மீனவர்கள் 6.8.2018 அன்று, கேரள மாநிலம், முனம்பம் என்னுமிடத்திலிருந்து விசைப்படகில் புறப்பட்டு, கடலில் மீன்பிடி பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கப்பல் ஒன்று மோதி மீன்பிடி படகு கவிழ்ந்ததில், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்களின் உடல்கள் சடலமாக மீட்கப்பட்டது என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேலும், கேரள மாநிலத்தில் மீன்பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, கப்பல் மோதி, படகு கவிழ்ந்ததில், காணாமல் போன தமிழக மீனவர்கள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டு இறுதி அறிக்கை சமர்ப்பிக்க வருவாய் நிருவாக ஆணையர் தலைமையில் அலுவலர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு அறிக்கையின் அடிப்படையில் காணாமல் போன மீனவர்கள் இறந்தவர்களாகக் கருதி உரிய நிவாரணம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலில் மீன் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்து, சடலமாக மீட்கப்பட்ட நான்கு மீனவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களது குடும்பத்திற்கு தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**